# இலங்கையின் சாதனைகள்

இல. 6

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

## கல்வி

அரசாங்க தகவற் பகுதி வெளியீடு

# அந்தக் காலம்!

**அந்தக் காலத்தில் கல்வித் துறையில் என்ன குறை இருந்தது ?**

1. மொழிக் கிணங்க கல்வி பிரிக்கப்பட்ட ஒரு முறை அப்பொழுது இருந்தது. ஓர் "ஆங்கில"ப் பாடசாலை என்றால் அங்கு குழந்தைகள் ஆங்கில மொழியில் கல்வி கற்றார்கள். "சிங்கள, தமிழ்"ப் பாடசாலை என்றால் அவற்றில் சிங்களம் அல்லது தமிழ் மூலமாகக் குழந்தைகள் கல்வி கற்றார்கள். இரு மொழிப் பாடசாலைகளை அதாவது ஒரு தேசிய மொழியும் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்ட பாடசாலைகளை ஸ்தாபிக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

2. பொதுவாகக் கூறின், சிங்கள, தமிழ்ப் பாடசாலைகள் மோசமான கட்டிடங்களையும் மோசமான உபகரணங்களையும் உடையனவாக விருந்தன. ஒரு பூரண கல்வியறிவை குழந்தைகள் இவற்றில் பெறவில்லை. எவ்வாறிருப்பினும், போதியளவு பாடசாலைகள் இருக்கவில்லை.

3. உயர்தரப் பாடசாலைகள் பட்டணங்களிலும் பெரிய நகரங்களிலுமே பெரும்பாலும் காணப்பட்டன.

4. தேசிய மொழிகள், ஆங்கிலப் பாடசாலைகளில் அநேகமாக அலட்சியம் செய்யப்பட்டன.

5. சிங்கள, தமிழ்ப் பாடசாலைகள் போதியளவு நல்ல ஆசிரியர்களைக் கவரவில்லை.

6. தங்கள் கல்வி பூர்த்தியாவதற்கு முன்பாகவே ஏராள மாணவர் பாடசாலையிலிருந்தும் விலகிக்கொண்டனர். பாடசாலைக்குச் செல்வதைக் கட்டாயப்படுத்துவதற்கு ஒரு சட்டம் இருந்தது, ஆனால் அது திறமையாக அமுல் நடாத்தப்படவில்லை.

7. பாடக்கிரமம் அடிக்கடி மிகவும் ஒருபடித்தாகவே காணப்பட்டது.

8. கல்வி, புத்தகங்களோடும் புத்தகங்களை வாசிப்பதோடும் மட்டுமே சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்டது. செய்கை முறையைக் கொண்டு கல்விகற்றுக்கொள்வதில் கவனஞ் செலுத்தப்படவில்லை. ஆகவே தொழிற்சாலைகளிலும் தோட்டங்களிலும் வேலை செய்வதன் மூலம் போதிக்கப்படும் எல்லாக் கல்வியும் சரீர உழைப்பும் இயந்திர வேலையுமென்று அலட்சியம் செய்யப்பட்டது.

9. தொழில் நுட்பக் கல்விக்கு அதற்குரிய ஸ்தானம் வழங்கப்படவில்லை.

10. வயது வந்தோர் கல்வி கற்பதற்குப் போதியளவு நிலையங்கள் இருக்கவில்லை.

11. சந்தர்ப்பங்களில் சமத்துவம் நிலவவில்லை. வறிய ஆனால் சாமர்த்தியமுள்ள குழந்தைகளுக்குச் சில பாடசாலைகளும் கலாசாலைகளும் வித்தியாவிருத்தி

வசதிகளை இலவசமாகக் கொடுத்த போதிலும், பாடசாலைச் சம்பளங்களால் பல குழந்தைகள் உயர் தரக் கல்வி பெறமுடியாது போய்விட்டது. இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படாத ஆங்கிலப் பாடசாலைகளுக்குச் சென்ற குழந்தைகளுக்கு மட்டுமே உத்தியோகங்கள் வழங்கப்பட்டதால், சிங்கள, தமிழ் பாடசாலைகளில் கல்விகற்ற குழந்தைகள் பாடசாலைச் சம்பளம் செலுத்தாதபோதிலும் அவர்களுக்கு உத்தியோகங்களிற் சேர்வதற்கான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவில்லை.

**12. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகத்துக்குச் செல்வதற்கான ஒரு படிமுறை இருக்கவில்லை.**

**கல்வி சம்பந்தமாக அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?**

டொனமூர் அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட, 1931 ம் ஆண்டிலிருந்து கல்வியை விஸ்தரிக்கவும் அபிவிருத்தி செய்யவும் ஏராளமான யோசனைகளும் திட்டங்களும் செய்யப்பட்டுள்ளன. மூன்று மைல் கற்கள்.

**1. கல்விபற்றிய விசேஷக் கொமிட்டி.**

இக்குழு பல மாத காலமாகக் கூட்டங்களைக் கூட்டி வாக்குமூலங்களைக் கேட்டது. இவற்றில் செய்யப்பட்ட இரண்டு தீர்மானங்களாவன :

**எல்லோருக்கும் பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரை இலவசக் கல்வி.**

**ஆரம்பப் பாடசாலையில் எல்லாக் கல்வியும் குழந்தையின் தாய் மொழியிலேயே போதிக்கப்படுதல்.**

## 2. 1950 ம் ஆண்டின் வெள்ளை அறிக்கையும் 1951 ம் ஆண்டின் கல்வி (திருத்த) ச் சட்டமும்.

உண்மையான ஒரு ஜனநாயகம் கல்வியறிவுள்ள மக்களைக் கொண்ட ஒரு ஜனநாயகம் மட்டுமே தான் என்பதை அரசாங்கம் உணர்ந்ததால் 1948 ம் ஆண்டில் இலங்கை சுதந்திர மடைந்ததற்குப் பின் கல்வியின் புனருத்தாரணத்துக்கு அது முதலிடம் அளித்தது. "இலங்கையில் கல்விச் சீர்திருத்தம் பற்றிய அரசாங்கத்தின் யோசனைகள்" என்ற வெள்ளை அறிக்கை தற்போதைய கல்விக் கொள்கையின் அடிப்படையாகும். மேலும் இது "கல்விச் சந்தர்ப்பங்களுக்கு" அதிக சமத்துவமளிக்கவும் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். பல யோசனைகளை அமுல்நடாத்த வசதியளிக்கும் பொருட்டு ஒரு திருத்த மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 1951 ம் ஆண்டு எப்ரில் மாதம் 1 ந் திகதி துவக்கம் சட்டமாகியது.

## 3. 1954-55 முதல் 1959-60 வரையுள்ள ஆறுவருடத் திட்டம் (கல்வி சம்பந்தப்பட்டவரை).

**1950 ம் ஆண்டின் வெள்ளை அறிக்கையின் சாராம்சத்தை உங்களால் எமக்குத் தரமுடியுமா. 1951 ம் ஆண்டின் கல்வி (திருத்த) ச் சட்டம் ?**

### வெள்ளை அறிக்கையின் சாராம்சம்

1. கல்வி மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்படுதல் :
   (அ) ஆரம்பக் கல்வி ;
   (ஆ) உயர்தரக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் ;
   (இ) மேலதிகக் கல்வி.

இவை மொழியின் அடிப்படையில் பிரிக்கப்படக் கூடாது.

2. (அ) 2 வருடகால பாலர் கல்வி.
(ஆ) 4 வருடகால ஆரம்பக் கல்வி.
(இ) 3 வருடகால உயர்தர (கனிஷ்ட) க் கல்வி.
(ஈ) 2 வருடகால உயர்தர (சிரேஷ்ட) க் கல்வி.
(உ) கல்லூரிக் கல்வி.
(ஊ) பல்கலைக் கழக அல்லது தொழிற் கல்லூரிப் படிப்பு.

3. கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நான்கு பல் தொழிற் கல்லூரிகளை ஸ்தாபித்தல். சிறுவர்களும் சிறுமிகளும் பாடசாலையை விட்டு வெளியேறிய பின் அவர்களுக்குத் தொழில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன. வர்த்தகம், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும், கணக்குவைக்கும்முறை, கீழைத் தேச சங்கீதமும் நடனமும், சிங்கள, தமிழ் மொழிகள், இலக்கியம், நாடகம் போன்ற பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு வாலிப வயதினருக்கும் வயது வந்தவர்களுக்கும் பகலிலும் இரவிலும் வசதியளித்தல்.

4. 5 வயதிலிருந்து 14 வயது வரையுள்ள வர்களுக்கு இலவசமாகக் கல்வி போதித்தல். VIII ம் வகுப்பில் தகுதிப் பரீட்சை யொன்றை நடாத்துதல். சிரேஷ்ட உயர்தரக் கல்வியின் எத்துறையிலாவது பயனடையக் கூடியவர்கள் இலவசக்கல்வியைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளலாம். இதில் சித்தியடையாதவர்கள் பாடசாலைக்கல்வியை உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் சம்பளம் செலுத்துவதன்மூலம் தொடர்ந்து பெற்றுக்கொள்ள

அனுமதிக்கப்படுவர். ஒரு வசதிக் கட்டணத்தை அறவிடவும் பாடசாலைக்கு அனுமதி வழங்கப்படும்.

5. அரசாங்கப் பாடசாலைகள், நன்கொடை பெறும் பாடசாலைகள் (பெரும்பாலும் மதஸ்தாபனங்களால் நடாத்தப்படுவன) சுயேச்சையான பாடசாலைகள் முதலியனவற்றைக் கொண்ட ஒரு தனி ஸ்தாபனமாக கல்வி கருதப்படும்.

6. பாலர் பிரிவில் சாதனமுறைகளைக் கொண்டு கல்வி பயிலுதல் விஸ்தரிக்கப் படுவதோடு ஆரம்பித்து எல்லாப் பாடசாலைகளிலும் கைப்பணிகள் புகுத்தப்படும். பாடசாலைக் குழந்தைகளுக்கும் தொழில்களில் பயிற்சியளிப்பதற்கான இடங்களாக மாற்றுவதற்காக கல்வியின் சாதனமுறைப் பாகம் வற்புறுத்தப்படவில்லை. புத்தகங்களின் மூலமாக மட்டுமேயல்லாமல் செய்து கற்றல் முறையைக் கொண்டும் எல்லாத் துறைகளிலும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை எமது குழந்தைகளுக்களிப்பதே இதன் நோக்கமாகும்.

7. குழந்தைகள் தங்கள் வீடுகளில் பேசும் மொழியே போதன மொழியாக விருக்கும். ஆரம்பப்பாடசாலைகளில் இது உபயோகத்திலிருந்துள்ளது. இப்பொழுது இது கனிஷ்ட உயர்தர பாடசாலைகளுக்கும் சிரேஷ்ட உயர்தர பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும். போதன மொழி ஆங்கிலத்திலிருந்து தேசிய மொழிகளுக்கு மாற்றப்படுவது கல்வித்தராதரமுள்ள ஆசிரியர்களும் தகுந்த பாடபுத்தகங்களும் இருப்பதைக் குறித்து கல்விமந்திரியவர்கள் திருப்தியடைவதோடு படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

8. 3 ம் வகுப்பிலும் அதற்குயர்த்த வகுப்பிகளிலும் எல்லாப்பாடசாலைகளிலும் ஓர் துணை மொழியாக ஆங்கிலம் கட்டாயப் பாடமாக விருக்கும்.

**குறிப்பு அட்டவணையிலுள்ள இந்த ஒழுங்குவிதிகள் உட்பட 1951 ம் ஆண்டின் கல்வி (திருத்த) ச் சட்டத்தால் செய்யப்பட்ட பிரதான மாற்றங்கள் எவை ?**

1. வித்தியாதிபதிக்கு ஆலோசனை கூறிவந்த கல்விச் சபைக்குப்பதிலாக கல்விமந்திரி அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு மத்திய ஆலோசனைச்சபை ஸ்தாபிக்கப்படுதல்.

2. வசதிக் கட்டணம் ஒன்றை அறவிடுவதற்கதிகாரமளித்தல், ஆனால் இப்படிப்பட்ட ஒரு கட்டணத்தைச் செலுத்தப் பெற்றோருக்குச் சாத்தியப்படாவிட்டால் குழந்தைகளைப் பாடசாலைக்கனுமதித்தல் சம்பந்தமாகவோ அவர்கள் பாடசாலைக்குச் செல்வது சம்பந்தமாகவோ தண்டிக்கப்படாதிருப்பதை தடுப்பதற்கு தக்க பாதுகாப்புகள் அவர்களுக்கு வழங்கப்படுதல்.

3. உயர்தர கல்விக்குப் பொருத்தமானவர்களென தகுதிப்பத்திரம் வழங்கப்படாத குழந்தைகளைத்தவிர, ஏனையோருக்கு எவ்விதப் பாடசாலைச் சம்பளமும் அறவிடப்படாதிருத்தல்.

4. சிரேஷ்ட உயர்தர கல்விக்கு மாணவர்கள் பின்வரும் அடிப்படையில் தேர்த் தோடுக்கப் படுவார்கள் :

(i) வித்தியாதிபதியின் தேவைகளுக்கிணங்க நடாத்தப்படும் ஒரு பரீட்சை ;

(ii) பரிசோதனைக்குக் கிடைக்கக் கூடியனவாகவுள்ள, ஒரு மாணவனின் கடந்தகால கல்வி விவரம் பற்றிய பதிவுகள் ;

(iii) வித்தியாதிபதி கோரும் சம்பந்தப்பட்ட வேறு எந்தத்தகவலையும் கவனித்தல்.

5. சுயேச்சையான அல்லது நன்கொடைபெறாத பாடசாலைகளை அனுமதித்தல்.

**ஆனால்** இப்படிப்பட்ட பாடசாலைகளின் கல்வியும் பயிற்சியும்:

(அ) தேசீய நல்வுரிமைகளுக்கிணங்கவும்

(ஆ) போதனுமொழி சம்பந்தமான கொள்கை உட்பட அரசாங்கத்தின் பொதுவான கல்விக் கொள்கைக் கிணங்கவும் இருத்தல் வேண்டும்.

6. ஒரு குழந்தையை அது வசிக்கும் பிரதேசத்தில் வசதியாக அமைக்கப்பட்டுள்ள ஒரு பாடசாலையில் வித்தியாதிபதியவர்களால் அனுமதித்துக்கொள்ள சாத்தியப்படாவிட்டாலொழிய அக்குழந்தையைக் கட்டாயக் கல்வியிலிருந்தும் தவிர்க்கும் எவ்வித சாட்சிப்பத்திரமும் வழங்கப்படாதிருத்தல்.

7. கட்டாயக் கல்விக்காலம் 1947 ம் ஆண்டுச் சட்டத்தில் விதிக்கப்பட்ட 5 வயதுமுதல் 16 வயதுவரையுமாக அல்லாமல் 5 வயது முதல் 14 வயதுவரையுமாக இருத்தல்.

8. நன்கொடைபெறும் பாடசாலைகள் தொடர்ந்து நன்கொடைபெறும் பாடசாலைகளாகவே இருப்பதைத் தெரிவு செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், அவை

அப்படி தெரிவு செய்துகொண்டால், (1951 ம் ஆண்டின் கல்வி (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டதைப்போல்) பிரதான சட்டத்திலுள்ள நன்கொடைபெறும் பாடசாலைகள் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டும்.

9. பாடசாலைகள், அவை அரசாங்கப்பாடசாலைகளாக விருப்பினும் சரி நன்கொடைபெறும் பாடசாலைகளாக விருப்பினும் சரி ஆரம்பப்பாடசாலைகள், கனிஷ்ட உயர்தர பாடசாலைகள், சிரேஷ்ட உயர்தரபாடசாலைகள், கல்லூரிகள் என வகுக்கப்படும்.

10. அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.

11. தோட்டப் பாடசாலைக் கட்டிடங்களுக்கான தரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

12. நன்கொடைபெறும் பாடசாலைகளுக்களிக்கப்படும் பணங்களில் பின்வருவன அடங்கும்.

(அ) ஒரு நன்கொடைபெறும் பாடசாலையிலுள்ள, ஒழுங்குப் பிரமாணங்களின்படி நன்கொடை பெறப்பாத்தியதையுடைய எல்லா ஆசிரியர்களுக்கும் செலுத்தப்படவேண்டிய சம்பளங்களின் தொகை.

(ஆ) அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள விகிதங்களின்படி கணிக்கப்பட்ட "கொண்டுநடாத்துவதற்கும் உபகரணங்களுக்குமான பணம்" என்றழைக்கப்படும் ஒரு தொகை.

## அந்தத் திட்டங்கள்


**திட்டங்கள், மேலதிகமான திட்டங்கள் ! பணக்காரர்களுக்குப் போலவே ஏழைகளுக்கும் கொழும்பு வாசியின் மகனுக்குப் போலவே கிராமவாசியின் மகனுக்கும் தருணங்களை வழங்குவதற்கான ஒரு சிறந்த கல்விமுறையின் திட்டங்கள் பாடசாலைகளில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனவா என்பதையே நாங்கள் அறிய விரும்புகிறோம். கல்வியில் " குழப்பம் " ஏற்பட்டிருக்கிறதா இல்லையா ?**

சிறந்த திட்டங்களை அவசரத்தில் பூரணமாக அமுலுக்குக் கொண்டுவர முடியாது என்பதை முதலில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு உதாரணங்களை நாங்கள் எடுத்துக்கொள்வோம். " புதியத் திட்டம் பூரணமாக நடைமுறைக்கு வருவதற்கு சில வருடகாலம் செல்லும். மேலும் அது படிப்படியாக அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டும். அத்திவாரம் ஸ்திரமாக இடப்பட்டுவிட்டால், படிப்படியான வளர்ச்சிக்கு நாங்கள் தயாராயிருத்தல் வேண்டும், " என்று 1950 ம் ஆண்டின் வெள்ளை அறிக்கையின் முகவுரை கூறுகின்றது. இன்னும் பொருளாதார, சேமாபிவிருத்திக்கான ஒரு மகத்தான திட்டமாகவுள்ள 1954–55 முதல் 1959–60 வரையுள்ள ஆறுவருட முதலீட்டுத்திட்டம் ஆறுவருடகாலத்துக்கான ஒருதிட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. கவனமாகத் திட்டமிடுவதன் மூலமாகவும் படிப்படியாக முன்னேறுவதன் மூலமாகவுமேயல்லாமல் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை

கொண்டுநடாத்த முடியாது. அப்படியிருந்தும் கூட இத்திட்டம் ஏற்கெனவே நல்ல முறையில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

மேலேயுள்ள கேள்விகளுக்குத் திரும்பிச் செல்லுவோம். இவை ஒவ்வொன்றும் முக்கியமானவையே. இச்சிறு புத்தகத்தில் இனிவரும் உண்மைகளும் புள்ளிவிவரங்களும் அக்கேள்விகளுக்கான விடைகளைத் தருவனவாகவிருக்கும். என்ன அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதென்பதை அவ்விடைகள் எடுத்துக் கூறுவனவாக விளங்கும். இதர பல நாடுகளிற் போல், கல்வித்துறையில் இன்னும் நிறைவேற்றப்படாத எண்ணங்களும் அகற்றப்பட வேண்டிய குறைகளும் அடையப்படாத குறிக்கோள்களும் இருக்கின்றன. இருந்தபோதிலும் ஒரு ஒழுங்கு முறை இருக்கிறதென்பதும் ஒருதிட்ட வட்டமான கல்விக் கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரப் படுவதும் கண்கூடு.

**பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரை**



## கல்வியின் தரம்

**கல்வியின் தரத்தை விருத்தி செய்தற்கு என்ன செய்யப் பட்டுவருகிறது ?**

பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதோடு போதிக்கப்படும் கல்வியின் தரத்தை விருத்தி செய்தற்குக் கடந்த சில வருடங்களாக என்ன செய்யப்பட்டிருக்கிற தென்பதைக் கவனித்தல் சரியே. என்ன செய்யப் பட்டிருக்கிறதென்பதைப் பற்றிய சில உதாரணங்கள் இதோ இருக்கின்றன.

(1) இப்போதைக்குப் பொருத்தமற்ற பாடத் திட்டங்கள் பரிசோதனை செய்யப்பட்டு புதிய பாடத் திட்டங் கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவ்வேலை இன் னும் கொமிட்டிகள் மூலமாக செய்யப்பட்டு வரு கின்றது. விசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகள், கல்விப்பகுதி யின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இவற்றில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

(2) பாலர் பாடசாலைப் பாடத் திட்டம் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. இது சரியாகக் கொண்டுநடாத் தப்பட்டால் எமது குழந்தைகளின் கல்விக்கான சிறந்த அத்திவாரத்தை ஏற்படுத்திக்கொள்ளும்.

(3) பாடசாலை விவசாயம், பாடசாலை தோட்டப் பயிர்ச் செய்கை, பொது விஞ்ஞானம், கைப்பணிகள் முதலியவற்றிற்கான பாடத் திட்டங்கள் தயாரிக் கப்பட்டு 1952 ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டன.

ஆனால் இவற்றைக் குறித்து செய்யப்பட்ட கண்டனங்களை முன்னிட்டு பாடசாலை விவசாயம், பொது விஞ்ஞானம், கைப்பணிகள் முதலிய வற்றிற்கு புதிய பாடத்திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. இவை பிரசுரிக்கப்படவிருக் கின்றன. பாடக் கிரமத்தை நவமாக்குவதற் கென மந்திரியவர்களால் நியமனஞ் செய்யப் பட்ட பாடக்கிரமக் கொமிட்டி இப் பாடத்திட்டங் களும் மனையியல் பாடத்திட்டமும் பிரசுரிக்கப் படுவதற்குமுன் இவற்றைப் பரிசோதனை செய் யும்.

(4) ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான ஒரு விரிவான பாடத்திட்டம் 1955 ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது.

(5) ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் வேலை விசேஷ மாக சங்கீதம், சித்திரம், நாடகம், கைப்பணி, மொழி முதலிய துறைகளிலும், கல்வித்துறை யில் நலமான முறைகளைக் கற்பிப்பதிலும் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

(6) கல்விப் பகுதியாலும் ஆசிரிய சங்கங்களாலும் ஏற் பாடு செய்யப்படும் நினைவுறுத்தற் பயிற்சி வகுப்புகள் இலங்கையின் கல்வித்துறையில் இப் பொழுது ஒழுங்கான அம்சங்களாகும்.

(7) ஆசிரியர்களுக்கு அவர்களது பாடசாலைகளில் வைத்து ஆலோசனை கூறவும் அவர்களுக்கு வழி

காட்டவும் தங்கள் நேரத்தை இயன்றளவு செலவு செய்யுமாறு பாடசாலைப் பரிசோதகர்கள் ஊக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள். பாடசாலைகளின் வேலையின் தரத்தை இது ஸ்திரமாக விருத்தி செய்து வருகிறது. சுயபாஷையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆரம்பப் பாடசாலைகளின் கண்காணிப்பாளர்களாக நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(8) தேகப் பயிற்சிக் கல்வி, அதன் பல்வேறு துறைகளிலும் இப்பொழுது பாடசாலை வாழ்க்கையின் ஒரு விசேஷ அம்சமாக விளங்குகின்றது. முன்பு ஒரு சில நகரப் பாடசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை இப்பொழுது ஒரு பொதுவான நடவடிக்கையாகியுள்ளது. உண்மையில் இந்தப் புதிய அபிவிருத்தியில் கிராமப் பாடசாலைகள் ஆகக்கூடிய சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளன. ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரு அம்சமென்ற முறையில் விளையாட்டு மைதானத்தின் முக்கியத்துவம் எல்லோரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

(9) சித்திரப் பயிற்சி மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. சித்திரம், வகுப்பறையின் மேசை மீதுள்ள பொருட்களை வரையும் ஒரு பாடம் என்றல்லாமல் கருத்தை வெளிப்படுத்துகிற ஒரு பாடமாக இப்பொழுது கருதப்படுகிறது. பாடசாலைகளில் பாலர்களால் வரையப்பட்ட சித்திரங்

களிற் சில ஐக்கியராச்சியம், பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளில் காட்சிக்கு வைக்கப்பட்டன. இலங்கைப் பாடசாலைகளில் வரையப்படும் சித்திரங்கள் கிழக்கத்திய நாடுகள் எல்லாவற்றிலும் தாம் கண்ட ஆக்கச் சித்திரங்கள் அனைத்திலும் மிகச் சிறந்தவை என எமது பாடசாலைகளில் வரையப்படும் சித்திரங்களைக் காணும் சந்தர்ப்பத்தைப் பெற்ற ஓர் அந்நிய நாட்டு நிபுணர் கூறினார்.

(10) பாடசாலைத் தோட்டப் பயிர்ச்செய்கை பிரசித்தமடைந்துள்ளது. சுமார் 5,000 பாடசாலைகளில் பாடசாலைத் தோட்டங்கள் இருக்கின்றன.

(11) கடந்த சில வருடகாலமாக இலங்கையின் கிராமப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் சமுதாயங்களாக மாறி வருகின்றன. ஒன்று கூடி வேலை செய்யவும், குழுக்கள், கோஷ்டிகள் ஆகியவற்றில் அங்கத்தவர்களாகவும், ஒரு பாடசாலைச் சமுதாயமாக வாழவும் குழந்தைகள் கற்றுக் கொள்கின்றன. இந்த எண்ணம் வளர வளர முழுத் தேசத்துக்கும் ஒரு மகத்தான நன்மை பயக்கும். ஏனெனில் தாம் வாழும் சமுதாயத்துக்குத் தமது உழைப்பையும் திறமையையும் அர்ப்பணிக்கச் சித்தம் கொண்ட சந்ததிகள் தோன்றும். முன்பு பாடசாலையை ஒரு சமுதாயமாகக் கருதும் எண்ணம், நகரங்களிலிருந்த பெரிய கல்லூரிகளில் மட்டுமே முக்கியமாகக் காணப்பட்டது.

(12) கீழைத்தேய சங்கீதமும் நடனமும் குறிப்பிடத் தக்க விதத்தில் மறுமலர்ச்சி யடைந்துள்ளன. எனவே இந்த விதமான பல நிகழ்ச்சிகள் பாடசாலைக் கதம்ப நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள் ளாத பாடசாலைகள் இல்லை யென்றே சொல்ல வேண்டும். குறிப்பாக நகரப் பாடசாலைகளிலும் கிராமப் பாடசாலைகளிலும் கருத்தை வெளிப் படுத்தும் கலையாக நாட்டியத்தை அபிவிருத்தி செய்தல் பிரசித்தமடைந்திருக்கிறது.

(13) கடந்த சில வருட காலமாக, சாரண ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியளிக் கப்பட்டிருக்கிறார்கள். எனவே பயிற்சி பெறும் ஆசிரியர்கள் இப்படிப்பட்ட வேலையில் அதிக சிரத்தை கொண்டுள்ளார்கள். இதன் விளைவாக முன்பு நகரங்களிலுள்ள பெரிய பாடசாலைகளி லும் கல்லூரிகளிலும் மட்டுமே காணப்பட்ட சார ணர் இப்பொழுது கிராமப் பாடசாலைகளிலும் காணப்படுகிறார்கள். சாரணச் சிறுவர்கள் சார ணச் சிறுமிகள் இயக்கம் கல்விக்கோர் பணிப் பெண்ணாக விளங்குகின்றது. இதன் மூலமாக, சமயம், பெற்றோர், தேசம் ஆகிய விஷயங்களில் தங்களுக்குள்ள கட்டுப்பாடுகள், தன்னம்பிக்கை, ஏனையோருக்கு சேவை செய்தல் ஆதியனவும் இதர பல விஷயங்களும் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

(14) எல்லாத் தேசிய மொழி ஆசிரியப் பயிற்சிக் கலா சாலைகளிலும் 1954 ம் ஆண்டில் ஆரம்ப கணிதம் ஒரு கட்டாய பாடமாக்கப்பட்டது. இப்படிப் பட்ட எல்லாக் கலாசாலைகளிலும் பொது விஞ்ஞானமும் புகுத்தப்பட்டது. எல்லா ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளிலும் 1956 ம் ஆண்டு துவக்கம் சங்கீதம் அல்லது சித்திரம் கட்டாயப் பாடமாக விருக்கும். பெண்களின் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகள் அனைத்திலும் மனையியல் ஒரு விசேஷ அம்சமாகியுள்ளது.

(15) கல்வி மந்திரியவர்களால் தன்னிடம் சமர்ப்பிக்கப் பட்ட எல்லா விஷயங்கள் குறித்தும், கல்வி பற்றிய ஆலோசனைச் சபை மிகவும் பெறுமதி யான ஆலோசனைகளைக் கூறியுள்ளது.

## பயிற்சி பெறும் ஆசிரியர்கள்


| ஒரு பாகம் | | மற்றப் பாகம் |
|---|---|---|
| வருடம் | மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை | 1948 முதல் ஆசிரியப் பயிற்சியில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் |
| 1931 .. | 753 .. | 1. மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது |
| 1937 .. | 932 .. | 2. சிங்கள, தமிழ்க் கல்லூரிகளின் அந்தஸ்து உயர்த்தப்பட்டது |
| 1947 .. | 1,921 .. | 3. பாடத் திட்டம் நவீன முறைகளிலும் இலங்கையின் தேவைகளுக்குப் பொருத்தமாகவும் திருத்தப்பட்டது |

| ஒரு பாகம் | | மற்றப் பாகம் |
|---|---|---|
| வருடம் | மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை | 1948 முதல் ஆசிரியப் பயிற்சியில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் |
| 1948 .. | 1,519 | 4. நவீன போதனு முறைகளில் பயிற்சியளிக்கப் பட்டது |
| 1949 .. | 2,123 | 5. செவிப்புல, கட்புலக்கல்வி வசதிகளைக்கொண்டு பயிற்சி, உ-ம், சினிமாபடச் சுருள்கள், சித்திரங்கள் முதலியவற்றின் உபயோகம். |
| 1950 .. | 2,604 | 6. தேசீய மொழிகளைக் கற்றுக் கொள்வதிலும் பாடசாலைகளில் அவற்றைக் கற்பிக்கும்முறை களிலும் அதிக கவனஞ் செலுத்தப்பட்டது |
| 1951 .. | 2,854 | 7. சாதனுமுறைக் கல்விக்கு அதிக கவனஞ் செலுத்தப்பட்டது |
| 1952 .. | 2,940 | 8. தேகப் பயிற்சிக் கல்விக்கு அதற்குரிய ஸ்தா னம் வழங்கப்பட்டது |
| 1954 .. | 2,896 | 9. சித்திரம், கீழைத்தேய சங்கீதம், நடனம், பாட்டு, நாட்டுப்பாடல் ஆகியவற்றிற்கு எல்லா விதமான ஊக்கமும் அளிக்கப்பட்டது |
| | | 10. சித்திரப் பயிற்சித் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன |
| ஆசிரிய பயிற்சிக் கலா சாலைகளின் தற்போதய எண்ணிக்கை : 18 | | 11. கிராமப் பாடசாலைகளுக்கான பொது விஞ் ஞானம் இப்பொழுது ஆசிரிய பயிற்சியில் ஒரு பகுதியாகி வருகிறது |
| பட்டதாரி ஆசிரியர் களின் பயிற்சி | | 12. எல்லா ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் மாணவ மாணவிகளின் சமுதாய வாழ்க்கை யொன்று அபிவிருத்தி செய்யப்படுதல் |
| இது இலங்கைப் பல் கலைக் கழகத்தின் கல்வித்துறையில் அளிக்கப்படுகின்றது | | 13. கல்வியில் சமயத்தின் முக்கியத்துவத்தைப் பூரணமாக அங்கீகரித்தல் |

**தேசீய ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகள்.** 1954 ம் ஆண்டில் மீரிகமத்திலும் பலாலியிலும் இரண்டு தேசீய ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டதோடு ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதில் ஒரு புதிய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கலாசாலை (சுயபாஷை) களில் பயிற்சிபெறும் எல்லா ஆண்களுக்கும் இவ்விரு முன்னோடி ஸ்தாபனங்களும் ஆறு மாதகாலத்துக்கு விவசாயத்தில் சாதனமுறைப் பயிற்சியளிக்கிறது. இந்த ஸ்தாபனங்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விவசாயத்தைச் சரியான கண் கொண்டு நோக்குதலையும் உடலுழைப்பின் கௌரவத்தையும், கல்வியில் வகுப்பறைப் போதனைக்குள்ள விருப்பம், நாட்டின் தேசீய செல்வத்தை அதிகரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு சாதனமுறை கல்வியின் பால் செலுத்தப்படுதலையும், தங்கள் மாணவ மாணவிகளின் உள்ளங்களில் பதிய வைப்பார்களென்று நம்பப்படுகிறது. மரவேலை, கட்டிட அமைப்பு, கோழிவளர்த்தல், பாற்பண்ணை போன்ற இதர சாதனமுறை நடவடிக்கைகளும் இந்த ஸ்தாபனங்களில் வழங்கப்படும் தீவிரசாதனமுறைக்கல்வியில் ஒரு பாகமாகும்.

# ஆசிரியர்களின் எண்ணிக்கை

பிரிவெனுக்களிலும் பயிற்சிக் கலாசாலேகளிலும் உள்ள வர்கள் நீங்கலாக




1954

48,468 ஆசிரியர்களும் ஆசிரியைகளும்

| | | |
|---|---|---|
| ஆங்கிலப் பாடசாலேகளில் | .. .. | 13,257 |
| சிங்களப் பாடசாலேகளில் | .. .. | 28,040 |
| தமிழ்ப் பாடசாலேகளில் | .. .. | 6,093 |
| தோட்டப் பாடசாலேகளில் | .. .. | 1,078 |

## பாடநூற் பிரசுரச் சபை என்றால் என்ன ?

1. இச்சபை 1950 ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்படுத்தப்பட்டது. பாடசாலைகளின் உபயோகத்துக்குப் பொருத்தமான புத்தகங்களைத் தெரிவு செய்வதும் அவசியமேற்பட்டபோதெல்லாம் பாடப் புத்தகங்களின் தரத்தை உயர்த்த உதவிபுரிவதும் அங்கீகரிக்கப் பெற்ற பாடப் புத்தகங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதுமே இதன் பிரதான அலுவலாக இருந்து வந்துள்ளது.

2. இலங்கைப் பிரஜைகளான நூலாசிரியர்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு கையெழுத்துப் பிரதிகளைப் பரிசோதனை செய்வதற்கு எவ்விதக் கட்டணமும் அறவிடப் படுவதில்லை. அவசியமேற்பட்ட போதெல்லாம் நூலாசிரியர்களுக்கு இச்சபை யோசனைகளைக் கூறுகின்றது. இதற்கும் கட்டணம் அறவிடப்படுவதில்லை. தேசீய மொழிகளில் பல பெறுமதியான கையெழுத்துப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டது இதன் விளைவுகளில் ஒன்றாகும். இவை பின்னர் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

3. ஒரு புத்தகத்தைப் பரிசோதனை செய்வதிலுள்ள ஒழுங்குமுறை மிகவும் முக்கியமானதாகும். ஒரு குழுவின் அங்கத்தவரும் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் நல்ல தேர்ச்சியுள்ளவரும் பெரும்பாலும் அப்பாடத்தில் ஆசிரிய அனுபவம் வாய்ந்தவருமான ஆராய்பவர் என்றழைக்கப் படும் ஒரு பரிசோதகருக்கு இச்சபையின் செயலாளர் அப்புத்தகத்தை அனுப்புகிறார். கவனமாகத் தயாரிக்கப் பட்ட ஒரு மாதிரிப்பத்திரத்தை அவர் நிரப்பவேண்டியிருக்கிறது. அவர் தமது வேலையை முடித்துக் கொண்டு

தமது அறிக்கையை சமர்ப்பித்ததும் அப்புத்தகம் பிறி தொரு ஆராய்பவரிடம் அனுப்பப்படுகிறது. முடிவில் இவ் விரு அறிக்கைகளும் புத்தகமும் சபையிடம் சமர்ப்பிக்கப் படுகின்றன. ஆராய்ச்சி அறிக்கைகள் ஒத்திருப்பின் சபை வழக்கமாக அப்புத்தகத்தை அங்கீகரிக்கின்றது. ஆனால் அவ்வறிக்கைகள் ஒத்திருக்கவில்லையென்பதைச் சபை கண்டுகொள்ளுமானால் அல்லது அப்புத்தகத்தைப் பற்றி பிறிதொரு நோக்கம் பெற்றுக்கொள்ளப்படவேண்டு மென்று சபையின் அங்கத்தவர்கள் எண்ணுவார்களானால் அப்புத்தகம் புதிய ஆராய்பவர் ஒருவருக்கு அனுப்பப்படும்.

4. விஷயதானம், வேலையின் தரம், பதிப்பு, சித்தி ரங்கள், விலை முதலியன சம்பந்தமாக சில ஆகக்குறைந்த தராதரங்களை அங்கீகரிக்கப்பெற்ற புத்தகம் திருப்திப் படுத்து கிறதா என்பதை நிச்சயப் படுத்திக்கொள்ள சபை முயற்சி எடுத்துக் கொள்கின்றது. விரும்பத்தகாதது எதுவும் புத்தகங்களில் இடம் பெருமலும், புத்தகங்கள் இலங்கை யின் நிலைமைகளுக்குப் பொருத்தமானவைகளாக இருப் பதையும்கூட இச்சபை கவனித்துக் கொள்கிறது.

5. பதிப்பு, சித்திரங்கள், விஷயதானத்தின் நடை, ஒரு புத்தகம் எந்த வயதுள்ள பிள்ளைகளுக்கென தயா ரிக்கப்பட்டதோ அந்த வயதுள்ள பிள்ளைகளுக்குப் பொருத் தமாக இருத்தல், விஷயதானம் கையாளப்பட்டுள்ள விதம், விஷயதானம் சரியாக இருத்தல், மேற்கொள்ளப் படும் போதனுமுறை சரியாக இருத்தல், மொழி, தார் மீகத்தன்மை, ஆதியன சம்பந்தமான தகவல்களுடன் ஆராய்பவரின் சிபார்சுகள் சமர்பிக்கப்பட வேண்டும்.

6. சபையின் வேலையை இப்புள்ளி விவரங்கள் ஓரளவிற்கு எடுத்துக் காட்டுகின்றன :

| ஆண்டு | சமர்ப்பிக்கப்பட்ட புத்தகங்கள் | | | அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்கள் | | | அங்கீகரிக்கப்படாத புத்தகங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் |
| 1951 | 1,171 | 941 | 246 | 598 | 130 | 20 | 67 | 184 | 22 |
| 1952 | 325 | 258 | 118 | 135 | 61 | — | — | — | — |
| 1953 | 362 | 223 | 93 | 536 | 362 | 93 | 12 | 35 | 35 |
| 1954 | 107 | 198 | 62 | 66 | 92 | 53 | 3 | 34 | 15 |

| ஆண்டு | சமர்ப்பிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் | | | அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் | | | அங்கீகரிக்கப்படாத கையெழுத்துப் பிரதிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் |
| 1951 | 8 | 54 | 5 | 2 | 4 | — | — | 7 | 1 |
| 1952 | 11 | 56 | 9 | 3 | 9 | — | 2 | 12 | — |
| 1953 | 7 | 110 | 11 | 6 | 61 | — | 6 | 45 | 6 |
| 1954 | 4 | 67 | 10 | 4 | 40 | — | 1 | 36 | 12 |

குறிப்புகள்

(1) பல புத்தகங்களும் கையெழுத்துப் பிரதிகளும் திருத்தப்பட்ட பின்பே அங்கீகரிக்கப்பட்டன.

(2) ஒரு வருடக் கடைசியில் சமர்ப்பிக்கப்பட்ட சில புத்தகங்களும் கையெழுத்துப் பிரதிகளும் அடுத்த வருட ஆரம்பத்தில் பரிசீலனை செய்யப்பட்டன.

# சாதனுமுறைக் கல்வி

## 1. பாடசாலைகளில்

**கைவேலைகளையும் கைப்பணிகளையும் கற்பிப்பதற்குப் பாட சாலைகளில் என்ன செய்யப்பட்டுவருகிறது ?**

இந்தப்பாடம் பற்றியும் தொழில் நுட்பக்கல்விபற்றியும் சொல்ல வேண்டியவை அநேகம் உண்டு. ஆனால் எமது பாடசாலைகளில் அளிக்கப்படும் சாதனுமுறைக் கல்வியோடு ஆரம்பிப்போம். இலங்கை ஒரு சுதந்திர நாடாகும். ஒரு சுமுகமானதும் செழிப்பானதுமான எதிர்காலத்தை எமக்கு ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய விதத்தில், ஆறு வருடத்திட்டத்தின் கீழ் மனிதர்களையும் பொருட்களையும் அரசாங்கம் உபயோகிக்க எதிர்பார்ப்பதால், பயிற்சி பெற்றவர்கள் அதற்கிருப்பது மிகவும் அவசியமாகின்றது. திறமை சாலிகளும், நாட்டின் மீது தமக்குள்ள அன்பை தாங்கள் உவந்து செய்யும் வேலையைக் கொண்டு காட்டிக்கொள் கிறோமென்று நினைக்கக்கூடியவர்களும் அதற்குத் தேவைபடுகின்றனர். தங்கள் கண்களாலும், கைகளாலும், மனங்களாலும் வேலை செய்வது கௌரவமெனக் கருதக் கூடியவர்களும் நேர்மையான உழைப்பின் மூலம் தங்கள் கைவிரல்களை அழுக்காக்கிக் கொள்ள அஞ்சாதவர்களும் அரசாங்கத்துக்குத் தேவைப்படுகின்றனர். தொழிலின் கௌரவத்தைக் கற்றுக் கொள்வதற்குப் பாடசாலையே அத்திவாரமாகும்.

பிரதம மந்திரி அதிகௌரவ சேர் ஜோன் கொத்தலாவலை அவர்கள் ஆறுவருடத்திட்டத்துக்குத்தாம் எழுதிய முன்னுரையில் என்ன கூறுகிறரென்பதைக்கேளுங்கள் :

"எமது திட்டத்தைப் போன்ற ஒரு திட்டம் பலன ளிப்பது ஒரு நாட்டின் புதல்வர்களும் புதல்விகளும் கொண்டுள்ள தேசாபிமானத்தையும், தங்கள் நாட் டின் மீது அவர்கள் கொண்டுள்ள அன்பையும் பற்றுதலையுமே பொறுத்திருக்கிறது."

நாங்கள் புத்தகங்கள் மூலமாகக் கற்றுக்கொண்டத னாலும், தொழிற் திறமையயுள்ளவர்களாவதற்குக் கற்பிக்கப் படாததாலும் நீண்ட காலமாக எமது கல்வி முறை ஒருதலைப் பட்சமானதாக இருந்ததென்பது உண் மையே. 1950 ம் ஆண்டிற்குமுன் எமது பாடசாலைகளில் ஒரு சில கைப்பணிப் பிரிவுகள் மட்டுமே இருந்ததால் சமீபகாலம்வரை தொழில் நுட்பவிற்பன்னர்களாகவும் கைப்பணியாளர்களாகவும் வரக்கூடிய திறமையுள்ள சிறு வர்களை எமது பாடசாலைகளில் கண்டு பிடிப்பது மிகவும் கஷ்டமாக விருந்தது- பெரும்பாலும் இவை அனைத்தும் தற்காலிக, மோசமான உபகரணங்களையுடைய கட்டிடங் களிலேயே இருந்தன.

1950 ம் ஆண்டிலிருந்து ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நாங்கள் பார்ப்போம். ஏனெனில் இது ஒரு நல்ல கதை. இதன் முடிவுகள் எமது தேசத்துக்கு மகத்தான நன்மை பயப்பனவாக விருக்கும்.

### அ.—ஆரம்பப் பாடசாலைகளில் கைவேலை

1. பாலர் வகுப்புகளில் இலேசான செயல்முறை வேலை யோடு ஆரம்பித்து கைப்பணிதுரிதமாக விஸ்தரிக்கப்பட்டது.

2. ஆரம்பப் பாடசாலைகளுக்கான கைப்பணிக்கு ஒரு திருத் தப்பட்ட பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பயிற்சி பெறும் ஆசிரியர்களால்ஏற்கெனவே கற்கப்பட்டு வருகிறது.

3. மாணவ, மாணவிகள் உள்ளூர்ப் பொருட்களை உப யோகிக்கின்றனர். இவ்வேலை இதர பாடங்களுடன் பல மாக இணைக்கப்பட்டிருக்கிறது.

## ஆ.—உயர்தர பாடசாலைகளில் கைப்பணி

கைப்பணிகள் இதர பாடங்களுடன் சரிசமமாகக் கற் பிக்கப்பட வேண்டுமென 1950 ம் ஆண்டின் வெள்ளை அறிக்கை சிபார்சு செய்தது. கனிஷ்ட உயர்தர பாடசாலையில் மாணவ, மாணவிகளின் சாமர்த்தியமும் சிரத்தையும் இதன் மூலமாக கண்டு பிடிக்கப்படலாம். காலக்கிரமத்தில் மத்திய பாடசாலைக்கட்டத்திலும் சிரேஷ்ட பாடசாலைக் கட்டத்திலும் சிறுவர்களும் சிறுமிகளும் இருவேறு பிரிவு களில் சேர்க்கப்படுவார்கள். அதாவது ஒரு சிறுவன் அல் லது சிறுமி சாதனுமுறைக் கல்வியில் அல்லது பாடப்புத்த கக் கல்வியில் அதிகசிரத்தை காண்பித்தால் அச்சிறு வனுக்கு அல்லது சிறுமிக்கு மிகவும் பொருத்தமான "பிரிவில்" செல்லக் கூடியதாக பாடங்கள் ஏற்பாடு செய் யப்படும். ஆனால் சாதனுமுறைக் கல்வியில் சிரத்தை காண்பிக்கும் குழந்தைகள், எல்லாக் கல்வித்துறைகளி லும் பயிற்சிபெற்றுக் கொள்ளும் பொருட்டு அவர்கள் இதர பாடங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும். நூற் கல்வியில் சிரத்தை கொண்டுள்ள மாணவ, மாணவிகள் சாதனுமுறைக் கல்வியிலும் ஓரளவு திறமையுள்ளவர் களாக வேண்டுமென எதிர்ப்பார்க்கப் படுகிறது.

புத்தகங்கள் மூலமாக போதிக்கப்பட்டுவந்த கல்வியின் நீண்ட சரித்திரத்தையும் கரங்களின் உபயோகத்துக் கெதி ராக இருந்து வந்த சில தப்பெண்ணங்களையும் கவனிக்கு

மிடத்து இது ஓரளவிற்கு துணிச்சலான ஒரு கருத்தாகும். இந்தக் கருத்து பல வருடகாலத்துக்கு நடைமுறையில் அனுஷ்டிக்கப்படுமானல் அது தனிமனிதனுக்கும் தேசத்துக்கும் மிகவும் பெறுமதியுள்ளதாக விருக்கும். இதைக் கொண்டு நடாத்துவதில் அதிக முன்னேற்ற மேற்பட்டுள்ளது. இதோ அந்த முன்னேற்றங்கள் :

(1) 1953 ம் ஆண்டின் ஆரம்பத்தில் உயர்தர பாடசாலைகளில் சுமார் 350 சாதனமுறை கைப் பணிப் பிரிவுகள் திறந்துவைக்கப்பட்டன.

(2) ஐக்கிய ராச்சியத்தாலும் ஆஸ்திரேலியாவினலும் வழங்கப்பட்ட கொழும்புத்திட்ட உதவியைக் கொண்டு 193 புதிய பிரிவுகள் எற்படுத்தப்பட்டுள்ளன.

(3) ஐக்கிய ராச்சியத்தாலும் ஆஸ்திரேலியாவினலும் வழங்கப்படும் உபகரணங்களின் உபயோகத்தால் 1956 ம் ஆண்டில் மேலதிகமாக 182 பிரிவுகள் திறந்துவைக்கப்படும்.

(4) பொருத்து வேலைத்தலங்களை அமைப்பதைக் கொண்டு இலங்கை தனது பங்கைச் செய்துள்ளது. இவை பல சந்தர்ப்பங்களில் பெற்றோர்—ஆசிரிய சங்கங்களாலும் கிராமாபிவிருத்திச் சங்கங்களாலும் நிர்மாணிக்கப் பட்டுள்ளன.

(5) கைப்பணிப் பிரிவுகள் எற்படுத்தப்பட்டுள்ள கனிஷ்ட உயர்தர பாடசாலைகளில் கைப் பணி ஒரு கட்டாயப் பாட மாக்கப்பட்டுள்ளது.

(6) பாடசாலைகளில் சாதனமுறைக் கல்வி அளிக்கப் படவேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் எவ்வளவு அக்கறை காட்டி வருகிறது என்பதை கொழும்புத் திட்டத்தின்கீழ் நியூசிலந்து அரசாங்கத்திடமிருந்து தொழில் நுட்பக் கல்வியின் நிபுணத்துவம் பெற்ற ஒரு ஆலோசகரை 1953 ம் ஆண்டில் நாம் பெற்றுக் கொண்டது நன்கு விளக்கும். மேஜர் டபுள்யூ. ஜே. பி. ஹண்டர், எம். பி. இ., கல்விப் பகுதியில் ஒரு விசேஷ தொழில் நுட்பக் கல்விப் பிரிவை நிறுவியிருக்கிறார். மேலும் பல கைப்பணிகள் பற்றிக் கைநூல்களை வெளியிட்டிருக்கிறார். விவரமான பாடத்திட்டங்களையும் வேலைத் திட்டங்களையும் வகுத்திருக்கிறார். ஆரம்பிக்கவிருக்கும் திட்டங்களைப் பற்றி மரத்திலும், உலோகத்திலும் செய்த மாதிரிகளை வினியோகித்திருக்கிறார். மகாரகமை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஒரு பயிற்சிச் சாலையை நிறுவினார். கொழும்புத் திட்டத்தின் உதவியால் நியூசிலந்திலிருந்து வரவழைக்கப்பட்ட உயர்தர பொறி வல்லாரை அங்கு வேலைக்கமர்த்தினார். ஐக்கிய இராச்சியம், ஆஸ்திரேலியா, நியூசிலந்து ஆதியாம் இடங்களுக்கு எமதுஆசிரியர்கள் சென்று கல்வி பெற கல்விச் சகாயங்களைப் பெற்றுத் தந்தார். கைப்பணிகளுக்கென ஒரு விசேஷ பரிசோதக சேவையை நிறுவினார். எமது பாடசாலைகளில் கைப்பணிகளைத் திறமையுடன் போதிப்

பதற்கு ஆவன செய்திருக்கிறார். இவற்றுடன் பல பாடசாலை வேலைத் தலங்களுக்கு கொழும்புத் திட்டத்தின் கீழ் சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து கிடைத்த விலைஉயர்ந்த நவீன உபகரணங்களை வழங்கியிருக்கிறார்.

**“சிறுவர்களுக்குச் சில குறிப்பிட்ட தொழில்களைப் பயிற்றித் தருதற்காகக் கைப்பணிகள் பாடசாலைகளில் சேர்க்கப்படவில்லை. கல்வி மதிப்புவாய்ந்த கைப் பணிகள் என்பதற்காகவே அவை சேர்க்கப்பட்டன. அவை உள்ளத்தை அபிவிருத்தி செய்யவும், தொழிற் திறமையைப் பெற்றுக்கொள்ளவும் மாணவர்களுக்கு உதவுகின்றன.”**

## இ.—தொழில்நுட்பக் கல்விப் பிரிவு

1. கல்வி மந்திரி காரியாலயம், பாடசாலைகளில் கைப் பணிகளைக் கற்பித்தல், கல்வியைப் பொறுத்த அளவிலும் நாட்டைப் பொறுத்த அளவிலும் எவ்வளவு அவசியம் என்பதைக் கருதி கொழும்புத் திட்டத் தொழில் நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் நியூசிலந்து அரசாங்கம் உவந்தளித்த முதிர்ந்த அனுபவஸ்தரான திரு. டபுள்யூ. ஜே. பி. ஹன்டர், எம். பி. இ., அவர்களின் சேவைகளை நன்றியோடு உவந்தேற்று கல்விப் பகுதியின் தொழில் நுட்ப ஆலோசகராக அவரை நியமித்துள்ளது. அவர் 1953 ம் ஆண்டு இப்பகுதியில் சேர்ந்தார். அவர் கைப் பணிப் பிரிவுகளை நிறுவுதல், கைப்பணிப் போதனை பற்றி ஆலோசனைகளைக் கூறுதல், நவீன உபகரணங்களைப்

பொருத்தி கைப்பணிகளைச் செய்வித்தல் முதலாம் அலுவல்களைப் புரிந்து வருகின்றார். எல்லா நவீன உபகரணங்களும் அனேகமாக சாம்ராஜ்ய நாடுகளால் இலங்கைக்கு உதவப்பட்டனவாம்.

2. 1953 ம் ஆண்டில் கல்விப் பகுதியின் தொழில் நுட்பக் கல்விப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு பிரதம பாடசாலைப் பரிசோதகரின் பொறுப்பில் விடப்பட்டது. கைப்பணிப் பரிசோதகர்கள் எண்மர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஐவர் வெளிநாட்டில் விசேஷபயிற்சி பெற்றவர்களாவர்.

3. **ஒரு விசேஷ கைப்பணிப் பகுதியை** மகாரகமை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அரசாங்கம் அமைத்தது. உயர்தரபாடசாலை (கைப்பணி) ஆசிரியர்களுக்கு இங்கு இருவருட போதனை அளிக்கப்படும். இப்பயிற்சி நிலையம் 1955 ம் ஆண்டு ஜனவரியில் நியூசிலந்திலிருந்து இலங்கைக்குத் தற்காலிகமாக அனுப்பப்பட்ட இரு நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் காட்டிய பாதையில் தன்வேலைகளைத் தொடங்கியது.

4. ஆலோசகர் ஒருவர் இருப்பதும், இக்கிளையைத் தோற்றுவித்தமையும் பாடசாலை மாணவர்களுக்குச் சாதனமுறைக் கல்வி அளிப்பது பற்றி வெள்ளையறிக்கையில் கூறப்பட்ட ஆலோசனைகள் நன்கு கவனிக்கப்பட்டமையைக் காட்டும்.

## தொழில்நுட்பக் கல்வியும் ஆறுவருடத் திட்டமும்

இத்திட்டத்தின் கீழ் கல்வி மந்திரிகாரியாலயம் தொழில் நுட்பக் கல்வியை பொதுவான கல்விமுறை மூலமும், கீழ்க்கண்ட தாபனங்கள் மூலமும் அளித்து வரும்.

(i) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி ;

(ii) கனேடிய உதவியுடன் கட்டப்படவிருக்கும் தொழில் நுட்ப ஸ்தாபனம் ;

(iii) மூன்று கனிஷ்ட தொழில் நுட்பப் பாட சாலைகள் ;

(iv) கொழும்பிலுள்ள ஒரு தொழிற்பாடசாலை ;

(v) அரசாங்க கவின்கலைக்கல்லூரி.

போக்குவரத்து மந்திரி காரியாலயம் ஏற்கனவே ஒரு அடிப்படைத் தொழில்நுட்பப் பயிற்சி ஸ்தாபனத்தை ரத்மலானையில் நடாத்திவருகிறது.

**எமது வளங்களை அபிவிருத்தி செய்தற்கும் எமது க்ஷேமாபிவிருத்தி சேவைகளுக்கு வேண்டிய பணங்களைச் செலுத்தற்கும் தொழில்நுட்பக் கல்வி அத்தியாவசியம்.**

**(i) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி.** இஞ்ஜினியரிங் துறையில் பல்கலைக் கழகப் பட்டமளித்தல் இப்பொழுது இலங்கைப் பல்கலைக் கழக இஞ்ஜினியரிங் கல்விப் பீடத்தின் பொறுப்பாக விளங்கி வருதலால் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வேலையைத் தொழில் நுட்பக் கல்லூரி செய்து

வருகிறது. இப்பொழுதுள்ள தொழில் நுட்பக் கல்லூரியின் வர்த்தகப்பகுதி ஒரு வர்த்தகப்பயிற்சி கல்லூரியாக அபிவிருத்தி செய்யப்படும். இக்கல்லூரி தற்போதைய தொழில் நுட்பக் கல்லூரிக்கட்டடத்திலேயே தொடங்கப்படும்.

(ii) **தொழில் நுட்ப சாதண கல்வி ஸ்தாபனம்** ஒன்று மொரட்டுவை நகர டிஸ்திரிக் எல்லையுள் கட்டுபெத்தை என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. அத் தாபனத்தில் மாணவர்கள் தங்கியிருந்து படிப்பார்கள். எற்கனவே தொழில் புரிபவர்களுக்கென மாலை வகுப்புகள் நடாத்தப்படும். இதற்காகச் செலவாகும் பணத்தில் பெரும் பகுதி கனேடிய அரசாங்கத்தால் தரப்படும். இத்தாபனம் பயிற்சி நிலைக்கும் சர்வ கலாசாலை நிலைக்கும் இடைப்பட்ட தொழில் நுட்ப விஞ்ஞர்களுக்குப் பயிற்சியளிக்கும்.

(iii) **கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலைகள்.** 1950 ம் ஆண்டின் வெள்ளையறிக்கையில் நான்கு பல் தொழில் நிலையங்கள் நிறுவப்பட வேண்டுமென ஆலோசனை கூறப்பட்டது. தொழில் நுட்ப ஆலோசகர் இந்த ஆலோசனையில் சொல்லப்பட்ட கருத்தை எற்றுரெனினும், ஆரம்பகாலத்தில் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலைகளாகவே இவை ஆரம்பிக்கப்பட வேண்டுமென அபிப்பிராயப்பட்டார். அரசாங்கம் காலியில் ஒரு கட்டிடத்தை இதற்காக வாங்கியுள்ளது. இது ஒரு தொழில் பயிலும் பாடசாலையாக இப்பொழுது அமைக்கப்பட்டுவருகிறது. இதற்கு வேண்டிய

உபகரணங்கள் ஐக்கிய இராச்சியம், கனடா, ஆஸ்தி ரேலியா, நியூசிலந்து ஆகிய தேசங்களால் உதவப் பட்டுள்ளன. நியூசிலந்து அரசாங்கம் கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் இத்தகைய பாடசாலைகளை நிறுவ $12\frac{1}{2}$ இலட்சம் ரூபா பெறுமதியான உதவியைச் செய்திருக்கிறது. இப்பாடசாலைகளில் சேர்வதற்கு 8 ம் தரம் படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர். இவர்கள் தகுதிப் பரீட்சையில் சித்தி எய்தியிருக்க வேண்டு மென்ற கட்டாயமில்லை.

ஆரம்பகாலத்தில் இப்பாடசாலைகளில் கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படும்;—

(அ) தச்சுவேலை, இணைப்பு வேலை, அலமாரி செய்தல்.

(ஆ) பொருத்துதல், செப்பனிடுதல் முதலியன.

(இ) மோட்டார் யந்திர வேலை, தானே இயங்கும் மின் சார வேலைகள்.

(ஈ) மின்சாரக் கம்பி பொருத்துதல்.

(உ) சுருக்கெழுத்து, டைப்படித்தல் உட்பட்ட வர்த்த கப் படிப்பு.

இப்பாடசாலைகள் உள்நாட்டின் இதர தொழில்களைப் பயிற்றவும் கலைசம்பந்தமான படிப்புகளைச் சொல்லிக் கொடுக்கவும் தக்கதாக விரிவடைவதற்கு எப்பொழு தும் இடமிருந்து வரும்.

(iv) **தொழிற் பாடசாலை.** இது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கட்டிடத்தில் அமைக்கப்படும். ஆனல் அதற்கெனச் சில அவசியமான மாற்றங்கள் செய்யப்படும். இங்கு முழு நேரமாணவருடன், பகுதி நேர மாணவரும் பயில்வார்கள்.

இங்கு கீழ்க்கண்ட பாடங்கள் சொல்லித்தரப்படும்.

(அ) கட்டடவேலை ;

(ஆ) மின்சாரம் ;

(இ) மோட்டார் இயந்திர வேலை ;

(ஈ) மரவேலை ;

(உ) உலோகவேலை ;

(ஊ) அச்சுவேலை.

(v) **அரசாங்க கவின்கலைக் கல்லூரி.** கவின்கலைகளான சித்திரம், சிற்பம், சங்கீதம், நடனம் முதலியவற்றில் பயிற்சி யளிப்பதோடு நில்லாமல் ஆறு வருடத் திட்டத்திலும் இக்கல்லூரி ஒரு முக்கிய பங்கை வகித்து வரும். முற்றிலும் அபிவிருத்தி செய்யப்பட்டபின்னர் இக் கல்லூரியில் வர்த்தக சித்திரம், கைத்தொழிற் சித்திரம் முதலிய துறைகளிலும் பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சியால் வர்த்தகத்துறைக்கும், கைத்தொழிற் துறைக்கும் நற்பயன்கள் நிகழும்.

### பிரிவேனைகள்

பிரிவேனைகள் என்று சொல்லப்படும் ஒரு வகைப் பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலை களில் பெரும்பாலானவை பௌத்தக் குருமாரின்

பயிற்சிக்குரியன. ஒரு பிரதம பிரிவேனையில் கீழ்த்திசை மொழிகள் மட்டுமே பயிற்றப்படு கின்றன. கனிஷ்ட பிரிவேனகள் சாதாரணபாட சாலைப் படிப்பும், கீழ்த்திசை மொழிகளில் ஆரம்பப்படிப்பும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

1954 ம் ஆண்டில் 147 பிரிவேனகள் அரசாங்க நன்கொடைபெற்றியங்கிவந்தன.

### கைத்தொழில்களுடன் தொடர்பு

கல்வி அதிகாரிகள் தொழிற் பகுதியின் தலைமை யின் கீழ் இருக்கும் பயிற்சிபெறும் கொமிட்டிகளு டன் நெருங்கிய தொடர்புகளை நிறுவிப் பேணி வந்திருக்கின்றனர். பயிற்சி நிலையில் பெறவேண்டிய திறமைகள் பற்றி அட்டவணைகள் தயாரிக்கப்பட்டன. தொழிற் பாடசாலைகளிலும் தொழில் நுட்பப் பாடசாலைகளிலும் அளிக்கப்படும் கல்விக்கு இவையே அடிப்படையாக விளங்கும். தொழில் நுட்பப் பாடங் களின் ஜி. ஸி. இ. பரீட்சையில் சித்தி எய்தியோ ருக்குக் குறைந்த கால பயிற்சியளிக்கும் கொள்கை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

## தேசீய மொழிகள்

**முன்னர் ஆங்கிலத்தில் பாடபோதனை நடந்துவந்த உயர் தர பாடசாலைகளில் சுயபாஷைகளைப் புகுத்த அரசாங்கம் யாது செய்துள்ளது ?**

முதலாவதாக, இம்மாற்றத்தைப் பலர் பலவிதமாகக் குறைகூறுகின்றனர்.

(அ) சிலர் இவ்வேலை மிகவும் மந்தகதியில் நடப்பதாகச் சொல்கின்றனர்.

(ஆ) இன்னும் சிலர் மிகவும் வேகமாக நடக்கிறது என்கிறார்கள்.

இக்கொள்கை தயாரிக்கப்பட்டபொழுது, இதில் பல கஷ்டங்கள் ஏற்படுமென நன்கு தெரிந்தது. இக்கஷ்டங்களைச் சமாளிக்கப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(1) இப்பொழுது ஒரு பயிற்சி ஆசிரியரும் அரசாங்கப் பயிற்சிக் கல்லூரியிலோ, உதவி நன்கொடை பெற்ற பயிற்சிக் கல்லூரியிலோ இருந்து தனது பாடங்களைச் சுயபாஷையில் பயிற்றும் திறமை பெற்றன்று வெளிப்படுவதில்லை. விஞ்ஞானம், கணிதம் முதலிய விசேஷ பாடங்கள் கற்பிக்கப்படும். மகாரகமைக் கல்லூரியிலும், மேற்கூறிய பாடங்களைச் சுயபாஷையில் போதிக்க வல்ல திறமை பெற்ற பின்னரே, பயிற்சி ஆசிரியர்கள் வெளியேறுகின்றனர்.

(2) பொது விஞ்ஞானம், கணிதம் முதலிய பாடங்களில் வரும் சொற்களின் சுயபாஷை அகராதி ஒன்று வெளியிடப் பட்டிருக்கிறது. பௌதிகம், ரசாயனம், தாவர இயல், மிருக இயல் முதலிய பல துறைகளில் கலைச் சொல்லகராதிகள் 1956 ம் ஆண்டின் முற்பகுதியில் வெளியிடப்படும்.

(3) தன்மொழிப் பகுதி என்ற புதிய பகுதி ஒன்று எஸ்.எஸ். ஸி. பரீட்சைக்கு வேண்டிய விஞ்ஞானச் சொல்லகராதி முலியவற்றைத் தயாரித்தற்கும், தகுந்த பாடபுத்தகங்களில்லாத கல்வித் துறைகளுக்கு வேண்டிய நூல்களை வெளியிடுதற்கும், மேற்படிப்புக்கு வேண்டிய நூல்களைத் தயாரித்தற்குமாக நிறுவப்பட்டது.

(4) பாடநூற் பிரசுரச்சபை. சிங்களத்திலும் தமிழிலும் பாடப் புத்தகங்கள், பாடசாலை நூல் நிலையப் புத்தகங்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துதற்கும், இருமொழிகளிலும் கை எழுத்துப் பிரதிகளை சமர்ப்பிக்கும்படி நூலாசிரியர்களைத் தூண்டுதற்கும் முயற்சி எடுத்துக்கொண்டது.

(5) 1956 ம் ஆண்டில் எஸ். எஸ். ஸி. ஆரம்ப வகுப்புகளில் விஞ்ஞானம், கணிதம், ஒழிந்த இதர பாடங்களைச் சுயபாஷையில் கற்பிப்பதற்காக 1955 ல் பண உதவியளித்து வகுப்புகள் நடாத்தப்பட்டன. இவ்வகுப்புகள் ஆசிரியர்களின் நலன் கருதி நாடு பூராவும் நடாத்தப்பட்டன. 350 ஆசிரியர்களுக்கு அதிகமானவர்கள் இவ்வகுப்பில் பங்குபற்றினர்.

(6) ஆங்கிலத்திலிருந்து சுயபாஷைக்கு மாறும் விஷயம் பல வருடங்களாகச் சிறிது சிறிதாக முயற்சிக்கப்பட்டது. இதன் பயனாக 1956 ம் ஆண்டில் எஸ். எஸ். ஸி. ஆரம்ப வகுப்பில்

விஞ்ஞானம், கணிதம் ஒழிந்த இதர பாடங்கள் சுயபாஷைகளில் கற்பிக்கப்படும். 1957 ம் ஆண்டில் எஸ். எஸ். ஸி. இறுதி வகுப்பிலும் விஞ்ஞானம் கணிதம் ஒழிந்த இதரபாடங்கள் யாவும் சுயபாஷைகளில் கற்பிக்கப்படும். வேறுவார்த்தைகளில் கூறினல் 1957 ல் ஆரம்ப, கனிஷ்ட உயர்தர சிரேஷ்ட உயர்தரக் கல்வியாவும், எஸ். எஸ். ஸி இறுதி வகுப்புவரை விஞ்ஞானம், கணிதம் ஒழிந்த இதர துறைகளில் சுயபாஷை மூலமே கற்பிக்கப் படும்.

இலங்கையிலுள்ள மக்களின் பெரும்பாலானேரின் இல்லங்களில் சிங்களம், அல்லது தமிழே பேசப் படுகிறது. தேசிய மொழிகளை உயர்தரக் கல்வியில் புகுத்துவதுமூலம், சந்தர்ப்ப சமத்துவம் அளிக்கப் படுகிறது. சர்வதேசத் தொடர்புகளுக்கும் மேற்கத்திய கருத்துகளை யறிந்து நலன் பெறுதற்கும் ஆங்கிலம் மிகவும் அத்தியாவசிய மாகும். ஆகவே அதற்கு III ம் வகுப்புக்கு மேற்பட்ட எல்லா வகுப்புகளிலும் இரண்டாம் மொழி அந்தஸ்து அளிக்கப்படுகிறது.

"குழந்தைகளுக்கு வீட்டுமொழியை நாம் கற்பிக்க வேண்டும். அம் மொழியில் தான் தன் உள்ளுணர்வெல்லாவற்றையும் ஒரு குழந்தையால் வெளியிட முடியும். இம் மொழியால்தான் நமது பண்பாட்டையும் நாம் அபிவிருத்தி செய்ய முடியும் . . . . . . . . . வீட்டு மொழி மூலம்

கல்வி கற்பிப்பதே நமது முடிவான நோக்க மாகுதல் வேண்டும். . . . . . அதன் பலனாக நாளடைவில் "ஆங்கிலப் பாடசாலை, சிங்கள தமிழ்" ப் பாடசாலை என்ற பேதங்கள் அறுதல் வேண்டும்.

**(வெள்ளை அறிக்கை, 1950)**

## முதியோர் கல்வி

**வயதில் முதிர்ந்த கிராமவாசிக்கென யாது செய்யப்படு கிறது ?**

1. 1949 ம் ஆண்டு தொடக்கம் கிராமப்புறத்தில் முதி யோர் கல்வி என்ற பிரச்சினை சம்பந்தமாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

2. பல அரசாங்கப் பகுதிகள் தம் வேலையில் எவ்வித தொடர்புமின்றிச் செயலாற்றின. ஒன்று சேர்ந்து வேலை செய்யும் போக்குக் குறைவாகவேயிருந்தது. எனவே 1951 ம் ஆண்டில் முதியோர் கல்வி சம்பந்தமான ஆலோசனைச் சபை ஒன்று தொழிற்பட ஆரம்பித்தது. கிராம வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட எல்லா அர சாங்கப் பகுதிகளின் பிரதிநிதிகளும் கீழ்க்கண்ட விஷயங் களை ஆலோசிப்பதற்காக ஒன்றுகூடினர்.

(அ) திட்டங்கள்

(ஆ) ஒரு அரசாங்கப் பகுதியின் இன்னொரு பகுதிக்கு எவ்வாறு உதவி செய்ய முடியும் என்பது.

இச்சபை 1951 ம் ஆண்டு தொடக்கம் மிகவும் உபயோக மான சேவைகளைச் செய்திருக்கிறது.

3. கல்விப் பகுதியின் முதியோர் கல்விக் கிளை பிரதேச ரீதியில் வேலை செய்கிறது. எழுத்து வாசனையற்றவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பாடசாலைப்படிப்பை முடிக்க முடியாதிருந்தவர்களுக்கு பாடசாலைப் படிப்புச் சொல்லித் தரப்படுகிறது. சங்கீதம் விளையாட்டு, பொழுது போக்கு முறைகள், குடிசைக் கைத்தொழில்கள், நாடகங்கள், கதம்ப நிகழ்ச்சிகள், கல்வி சம்பந்தமான யாத்திரைகள் என்பனவும் முதியோர் கல்வியில் இடம் பெறுகின்றன.

4. 1951 மார்ச் மாதத்தில், ஐ. நா. கல்வி சமூக கலாசார ஸ்தாபனத்தின் அடிப்படைக் கல்வித் திட்டம் மின்னேரியாவில் தொடங்கப்பட்டது. இதன் இலட்சியம் அடிப்படைக் கல்வியையும் முதியோர் கல்வியையும், மின்னேரி, கிரித்தலை, பராக்கிரம சமுத்திரம் ஆகிய மூன்று குடியேற்றத் திட்டங்களிலும், ஹிங்குராக் கொடையிலிருந்து 20 மைல் தூர சுற்று வட்டத்திலும் அபிவிருத்தி செய்வதாகும். சில பகுதிகளின் உத்தியோகத்தர்கள் இந்த நிலையங்களுக்கு ஐ. நா. கல்வி சமூக, கலாசார ஸ்தாபன வேலை முறைகளை கற்றற்காகச் சென்றனர். 1955 ம் ஆண்டு முடிவடைவதற்குள் இத்திட்டம் கிராமாபிவிருத்திப் பகுதியால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படும்.

5. சமீபகாலத்து விசேஷ சம்பவங்களிலொன்று சிறைச் சாலைகளில் முதியோர் கல்வியை அபிவிருத்தி செய்வதில் காட்டப்பட்ட சிரத்தையாகும்.

6. கல்விப் பகுதியின் முதியோர் கல்விப் பிரிவு, சினிமா வாகனங்களின்மூலம் சினிமாப்படக்காட்சிகளை ஆங்

காங்கு நடாத்தி வருகிறது. முதியோரும் சிறுரும் இவற்றைப் பெரிதும் விரும்புகின்றனர்.

7. இன்னும் எந்த வாசிக்கத் தெரியாத பலர் இருக்கின்றனர். அவர்களை எழுத்துவாசனையுள்ள வர்களாக்க முதியோர் கல்வி மூலம் நாம் பெரு முயற்சி செய்து வருகின்றோம்.

இது சம்பந்தமாகக் கீழ்க்கண்ட புள்ளி விபரங்கள் நமக்குப் பெரிதும் ஊக்கமளிக்கின்றன.

சமீபகாலத்துப் புள்ளி விபரம் கிடைக்கவில்லை. ஆனால் 73 சத வீதத்துக்கு அதிகமானபேர் எழுத் தறிவுள்ளவராயிருக்கின்றனர் என்று நிச்சயமாகக் கூறக் கூடியதாயிருக்கிறது.

**1881—1946, இலங்கையில் எழுத்தறிவு**

| | | |
|---|---|---|
| 1881 | .. .. | 17 சதவீதம் |
| 1901 | .. .. | 26 சதவீதம் |
| 1921 | .. .. | 30 சதவீதம் |
| 1946 | .. .. | 58 சதவீதம் |

சமீபத்துப் புள்ளிவிபரம் கிடைக்கவில்லை. ஆனால் 73 சத வீதத்துக்கு அதிகமான ரூபா எழுத்தறிவுள்ளவரா யிருக்கின்றனர் என்று நிச்சயமாகக் கூறக் கூடியதா யிருக்கிறது,

# இலங்கைப் பல்கலைக் கழகம்

**எமது பல்கலைக் கழகத்தைப் பற்றி ஏதாவது கூற முடியுமா ?**

1. 1870 ம் ஆண்டின் பெரியாஸ்பத்திரியில் தற்பொழுது பெண்கள் சத்திர சிகிச்சை வார்ட் என்றழைக்கப்படும் கட்டடத்தில் இலங்கை வைத்தியக் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது.

2. 1921 ல் கொழும்பில் " கொலிஜ் ஹவுஸ் " என்று இப்பொழுது அழைக்கப்படும் கட்டிடத்தில் பல்கலைக் கழகக் கல்லூரி நிறுவப்பட்டது. அந்நாளிலேயே இலங்கைக்கென ஒரு பரிபூரணமான பல்கலைக்கழகம் நிறுவுதற்கு இது முதற்படி என்றே அதன் தாபகர்கள் நம்பினர். இக் கல்லூரியில் 1921 தொடக்கம் 1941 வரை படித்துப் பட்டம்பெற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை 580 ஆகும்.

3. இலங்கைப் பல்கலைக் கழகம் 1942 ம் ஆண்டிற் சட்டமூலம் நிறுவப்பட்டது. ஆனால் அப்பல்கலைக்கழகத்துக்கு வித்தாகிநின்றது இலங்கை வைத்தியக் கல்லூரியும் பல்கலைக்கழகக் கல்லூரியுமாகும்.

4. பல்கலைக்கழகத்திலுள்ள கல்விப்பீடங்கள் பின் வருமாறு : " கீழ்த்திசைக் கல்வி, கலைகள், விஞ்ஞானம், வைத்தியம், எஞ்சினீயரிங்.

5. பல்கலைக்கழகம் ஒரு அரசாங்கப் பகுதியல்ல. அங்கு பணிபுரிவோர் அரசாங்க சேவையாளரல்ல. இருப்பினும் அது இலங்கை மக்களின் பல்கலைக்கழகமே. எனெனில்

பாராளுமன்றத்திலிருந்து கிடைக்கும் வருடாந்த நன்கொடையிலேயே அது தங்கியிருக்கிறது.

6. 1954 ல் அங்கு கற்ற மாணவர் தொகை 2,434 ஆகும்.

7. 1954 வரை இப்பல்கலைக்கழகத்தால் அளிக்கப்பட்ட பட்டமளிப்புகளின் எண்ணிக்கை 2,638 ஆகும். இவற்றில் 40 உயர்தர பட்டமளிப்புகளாகும்.

8. அரபு, பாளி, சமஸ்கிருதம், சிங்களம், தமிழ், பொருளாதாரம், ஆங்கிலம், பூமிசாத்திரம், சரித்திரம், சட்டம், நவீன மொழிகள் (மேலைத்தேய மொழிகள்), கணிதம், தத்துவ இயல், சமூக இயல், மேற்றிசைப் புராதன மொழிகள், விவசாயம், தாவர இயல், வேதிஇயல், கல்வி இயல், பௌதிகம், பிராணிஇயல், வைத்தியம், சத்திர சிகிச்சை ஆகியவற்றின் பல் வேறு பிரிவுகள், தந்தஇயல், மிருக வைத்திய இயல், ஸிவில், மின்சார, யந்திர இஞ்சினீயரிங் கல்வி.

**9. இலங்கைப் பிரஜையாக இருந்து, முதல் தடவையாகத் தம் வகுப்பில் கல்வி பயிலும் பட்டதாரியல்லாத ஒழுங்கான மாணவர் தாம் கல்வி பயில்வதற்கு எவ்வித கட்டணமும் கட்டத் தேவையில்லை.**

## பாடசாலைகளில் மதம்

**அரசாங்கம் பாடசாலைகளில் மத போதனை நடை பெறுவதில் அக்கரை கொண்டிருக்கிறதா ?**

சுதந்திரம் கிடைத்ததில் இருந்து அரசாங்கம் பாடசாலைகளில் மதபோதனை ஒழுங்குற நடப்பதில் மிகவும் அக்கரை

காட்டி வந்திருக்கிறது. சில வேளைகளில் அரசாங்க மத்திய சிரேஷ்ட, கனிஷ்ட உயர்தர ஆரம்பப்பாடசாலைகளிலும் பார்க்க உதவிநன்கொடை பெற்றுவரும் பௌத்த, இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ பாடசாலைகள் எண்ணிக்கையில் மிக அதிகமெனச் சிலர் எண்ணுகின்றனர். அரசாங்கப் பாடசாலைகளில் மதபோதனை அளிக்கப்படுகிறது என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர்.

இதோ உண்மை விபரங்கள் ;

(1) எந்தக் குறிப்பிட்ட மதத்தையும் சேர்ந்த 15 க்கு அதிக மாணவர்கள் ஒரு பாடசாலையில் காணப்பட்டால் அந்த மதம் அம்மாணவர்களுக்குப் போதிக்கப்படுதல் வேண்டும் என்ற சட்ட நியதி இப்பொழுது இருந்துவருகிறது. இதன்படி பௌத்தம், இந்து மதம், ஸ்லாம், ரோமன் கத்தோலிக்கம் ஒழிந்த இதர கிறிஸ்தவம், ஆகியவற்றைப் போதிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

(2) கொழும்பு அதிமேற்றிராணியார் விருப்பத்தின்படி ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவம் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்யாதுவிடப்பட்டது.

(3) பௌத்தம், இந்து மதம், இஸ்லாம், ரோமன் கத்தோலிக்கமதம் ஒழிந்த கிறிஸ்தவம் ஆகிய மதங்கள்பற்றி ஆலோசனைச் சபைகளின் உதவியோடு பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இப்பாடத்திட்டங்கள் கல்வி பயிலும் மாணவர்களின் மதப் பிரிவுகளை அனுசரித்துப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

(4) மதசம்பந்தமான புத்தகங்களை சம்பந்தப்பட்ட ஆலோசனைக் கொமிட்டிகள் நன்கு பரிசீலனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டன.

(5) மதபோதனை என்பது வகுப்புப் போதனையோடு முடிவடையவில்லை. பாடசாலை தொடங்கும்போது மத அனுட்டானத்தோடு படிப்பைத் தொடங்குதல், கோவில் குளங்களுக்கு இடையிடையே செல்லுதல், பாடசாலையுள்ளும் புறமும் மத சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுதல், ஆதியனவும் மதப்படிப்புள் அடங்கும். பாடசாலைகளிலுள்ள மதச் சங்கங்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் ஆதியனவும் மதக்கல்வி நன்முறையில் நடாத்துதற்குத் துணைபுரிகின்றன.

(6) அரசாங்கப் பாடசாலைகளின் தலைவர்கள் ஞாயிற்றுக் கிழமைப் பாடசாலைகளுக்குத் தங்கள் கட்டடங்களைக் கொடுத்துதவ அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றனர்.

(7) அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் யாவற்றிலும் மதக்கல்வி அளிக்கப்பட்டுவருகிறது.

(8) பரிசோதிக்கும் உத்தியோகத்தர், ஆசிரியர்கள் ஆகியோருக்கு புதியபாடத் திட்டங்களில் பயிற்சி பெறுதற்காக நினைவுறுத்தற் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன.

(9) கல்வி கற்பித்தற்கான உதவி உபகரணங்களும், வாசகசாலைக் கேற்ற நூல்களும், இலவச புத்தகங்களும் பாடசாலைகளுக்கு அளிக்கப்பட்டன.

(10) பாடசாலைகளின் மதநடவடிக்கைகளின்மூலம் கிராமமும் பாடசாலையும் ஒன்றுடனென்று மிக நெருங்கிய தொடர்பு கொண்டவையாக மாறியிருக்கின்றன.

# ஆறு வருடத் திட்டம்

## இதனால் கல்வித்துறையில் என்ன நன்மை ஏற்படும்?

1. ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள், அரசாங்க உயர்தர, கனிஷ்ட பாடசாலைக் கட்டடங்கள் விஸ்தரிக்கப்படுதலும், அபிவிருத்தி செய்யப்படுதலும், அவசியமான உபகரணங்களை வாங்குதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(2) பாடசாலை வேலைத் தளங்களும், கனிஷ்ட தொழில் நுட்பப்பாடசாலைகளும் அவற்றுக்குரிய உபகரணங்களும்.

(3) அரசாங்க கவின்கலைக் கல்லூரியும், தச்சுத் தொழில் வேலைத்தளங்களும்.

(4) பரீட்சைப் பகுதிக்கு இரகசிய அறை.


(5) நிர்வாகக் கட்டடம், வைத்தியக் கல்விப்பீடம், கொழும்பிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தின் நோய்க் கூற்றியற் பகுதிக்குரிய கட்டடங்கள்.

(6) பேராதனைப் பல்கலைக்கழகக் கட்டடங்கள். எமது பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைகள் இன்னும் பல உள.

(7) மொரட்டுவை நகர டிஸ்திறிக்குள் கட்டுபெத்தை என்னும் இடத்திலிருக்கும் சாதனை தொழில் நுட்பத் தாபனம். கனடாவிலிருந்தும் அரசாங்க நிதிகளிலிருந்தும் தாராளமான நிதிகள் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

## பாடசாலைகளின் தொகை

*பிரிவேனைகள், பயிற்சிக் கல்லூரிகளை விலக்கி*





நேற்று

1874 இல் : 838 பாடசாலைகள்.

இன்று

1955 இல் : சுமார் 6,800 பாடசாலைகள்

## மாணவர் தொகை




## சராசரி வரவு

| வருடம் | | மாணவர் தொகை | | சராசரி வரவு |
|---|---|---|---|---|
| 1897 | .. | 150,593 | .. | 88,849 |
| 1954 | .. | 1,617,093 | .. | 1,311,278 |

8. ஒரு தொழிற் பாடசாலையைக் கொழும்பில் நிறுவுதல்

**மேலே காட்டப்பட்ட அட்டவணையிலிருக்கும் எட்டு அம்சங்களில் நாலு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவத்தக்கனவாகும் என்பதை நீங்கள் காணலாம்.**

*" சுதந்திரம் கிடைத்ததிலிருந்து புதிய துறைகளில் முக்கியமாக தொழில் நுட்பத்துறைகளில் பல வேலைகளிருப்பதை நாம் நன்கு காணக்கூடியதாயிருக்கிறது. இவ்வேலைகள் முன்னர் வெகு சில இலங்கையருக்கே கிடைத்து வந்தன. தேசத்துக்குத் திறமை நிறைந்த பூரணமான சேவையைச் செய்தற்கு எமது எதிர் காலத் தொழில் நுட்ப வினைஞர்களுக்குப் போதிய பயிற்சியளித்தல் அவசியம்."*

# இவை

# உங்களுக்குத் தெரியுமா?

1. *கடந்த எழு வருடங்களில் பொது வேலைப் பகுதி 8 பயிற்சிக் கல்லூரிகளை நிறுவியிருக்கிறது.*

2. *கடந்த எழு வருடங்களில் பொதுவேலைப் பகுதி 50 மத்திய பாடசாலைகளையும் 40 சிரேஷ்ட, கனிஷ்ட பாடசாலைகளையும் கட்டும் வேலையை மேற் கொண்டிருக்கிறது. இவற்றில் பாதி எற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுவிட்டன.*

3. கல்விப் பகுதியும் இக்காலத்தில் 116 புதிய பாடசாலைக் கட்டியிருக்கிறது. தற்பொழுதுள்ள பாடசாலைக் கட்டடங்களுக்கு 445 அபிவிருத்தி வேலைகளையும், 290 மாற்றுக் கட்டடங்களையும் பூர்த்தி செய்திருக்கிறது. இவற்றின் பலனாக 93,000 மாணவர்கள் இவற்றில் கல்விகற்கக் கூடியதாயிருக்கிறது.

4. கிராமாபிவிருத்திச் சங்கங்களும், பெற்றோர் ஆசிரிய சங்கங்களும் 730 நிரந்தரக் கட்டடங்களையும், முழு நிரந்தர மற்ற கட்டடங்களையும் இலவசமாக அமைத்தன. 50 கட்டடங்கள் உதவி நன்கொடை ரீதியில் அமைக்கப்பட்டன.

5. பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் 10 வேலைத்தளங்களை அமைத்தன. 21 வேலைத் தளங்கள் கொந்தராத்து முறையிற் கட்டப்பட்டன.

6. இன்று இத்தீவின் பாடசாலை செல்லும் வயதினரான (4-14 வயது) சிறுவர்களில் 74 சத வீதத்தினர் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். ஜப்பான் ஒழிந்த இதர ஆசிய நாடுகளிலும் பார்க்க இது அதிகமாகும்.

7. கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கலைச் சொல்லகராதிகள் சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன. சமூக சாத்திரம், வேதியியல், பூதஇயல், தாவரஇயல், விலங்கு இயல் ஆகிய துறைகளில் அனேகமாக வேலைகள் பூர்த்தியாகிவிட்டன.

8. கல்வித்துறையில் 1954 ல் தலைக்கு ரூபா 17.42 வீதம் செலவிடப்பட்டது. இதில் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகத்திற்கு நன்கொடை, தேசீய பொருட்காட்சிச்சாலை அரசாங்க புரா தன சாசன பாலகர் பகுதி, இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரி, பாடநூற் பிரசுரச்சபை, பரீட்சைப் பகுதி, அரசாங்க கவின்கலைக் கல்லூரி ஆதிய வற்றுக்கான செலவுகள் யாவும் அடங்கும்.

9. பாடசாலைகள் ஜாதி அடிப்படையில், இன அடிப் படையில் பிரிக்கப்படவில்லை. அரசாங்கத்தால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைகளும், அரசாங்க நன்கொடை பெற்று நடக்கும் பாடசாலைகளும் ஜாதி, இனம், மதம் என்ற வேறுபாடுகளின்றிச் சகலரையும் அனுமதிக்க வேண்டுமென்று சட்ட மூலம் வற்புறுத்தப்படுகிறது.

10. பரீட்சைப் பகுதி ஒன்று தனியாகக் கல்விப் பகுதி யின் கீழ் 1951, அக்டோபர் 1 ந் தேதி நிறுவப் பட்டது. இப்பகுதி ஜி. ஸி. இ. பரீட்சையையும், கீழ்த்திசைக் கல்விச் சங்கப் பரீட்சைகளையும் நடத்து கிறது. மேலும் திறைசேரியின் சார்பிலும் இதர பகுதிகளின் சார்பிலும், பரீட்சைகளை இது நடத்து கிறது. ஒரு சில லண்டன் பல்கலைக் கழகப் பரீட்சைகளையும் அது நடாத்துகிறது.

11. இப்பகுதி செய்த வேலை அளவில் பெரியதும் பொறுப்பு வாய்ந்ததுமாகும். கடந்த இருவரு டங்கள் சம்பந்தமான கீழ்க்கண்ட புள்ளி விபரங் களைப் பாருங்கள்.

பிரவேசங்கள்

| வருடம் | ஜி. ஸி. இ (சாதாரணம்) | ஆசிரியகலாசாலைப் பிரவேசம் | மத்திய பாடசாலை மாணவர் | லண்டன் பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|
| 1953 | .. 75,000 .. | 19,000 .. | 27,000 .. | 38,000 |
| 1954 | .. 76,000 .. | 21,000 .. | 28,000 .. | 3,900 |

12. 1832 க்கும் 1952 க்கும் இடையிலுள்ள நூறுண்டுகளில் கல்வித்துறையில் பெரியதோர் மாற்றம் ஏற்பட்டது. 1802 ல் இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாயிற்று. 1832 ல் ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1952 ல் முழுக் கல்வி முறையும் மாறுதலடைந்தது. சுதந்திர ஜனநாயக நாடொன்றின் பிரஜைகளை, பாலர் விருத்தாப்பியராகிய சகலரையும் பயிற்றற் கேற்ற திட்டமொன்று உருவாகியது. தேசீய கல்விக்கொள்கையில் தேசீய மொழிகளுக்கு முதன்மைதரப் பட்டது.

13. 1945 தொடக்கம் அரசாங்கம் கிராமப் பகுதிகளில் மத்திய பாடசாலைகளை நிறுவுவதை ஒழுங்காகத் திட்டமிட்டுச் செய்தது. கடந்த 10 வருடங்களில் 56 க் குறையாத மத்திய பாடசாலைகளும் 59 சிரேஷ்ட பாடசாலைகளும் நிறுவப்பட்டிருக்கின்றன. இப்பாட சாலைகளில் கிராமப் புறக் குழந்தைகள் உயர்தர கல்வியைப் பெற்றுக்கொள்ளலாம்.

14. கிராமப் புறங்களில் வசிக்கும் சாதுரியம் வாய்ந்த மாணவர் எவரும் இப்பொழுது பல்கலைக்கழகத்திலோ, வைத்தியர் வழக்கறிஞர்போன்ற தொழில்களிலோ அல்லது அரசாங்க சேவையின் உயர்தர படிகளிலோ சேர்ந்து நலன்பெறுதல் சாத்தியமாம். முன்னர் இத்துறைகள் யாவும் ஆங்கிலங் கற்ற நகரவாசிகளுக்கே உரியன. இலங்கை தன் சுதந்திரத்தை எய்திய பின்னர் சந்தர்ப்ப சமத்துவத்தை அமுல்நடத்தி வருதற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

15. கல்விக்கெனச் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாவுக்கும் 91 சதம் ஆசிரியர்களின் சம்பளத்துக்காகச் செலவிடப்படுகிறது.

16. பெண் கல்வியில் மனையியலுக்கு முக்கிய இடம் தரப்பட்டிருக்கிறது. ஏராளமான பாடசாலைகளின் நேர சூசிகையில் அது இடம்பெற்றுள்ளது.

தகவற் பகுதியினரால் வழங்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது

J. N. R 5434—7,507 (2/56)